මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල
மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
MAHAPOLA HIGHER EDUCATION SCHOLARSHIP TRUST FUND
4 වන මහල, ජේ. ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, 191, ධර්මපාල මාවත, කොළඹ 07, ශ්‍රී ලංකා.
4ஆம் மாடி ,ஜே.ஆர்.ஜயவர்தன நிலையம்,191,தர்மபால மாவத்தை,கொழும்பு 07.
4TH Floor, J.R. Jayewardene Centre, 191, Dharmapala Mawatha, Colombo 07, Sri Lanka.

මගේ අංකය / எனது இல / My No. MTF/1/3(ii) | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2019.02.

1. துணைவேந்தர்,

கொழும்பு, பேராதனை, களணி, ஸ்ரீ ஜயவர்தனபுர, மொரட்டுவை, யாழ்ப்பாணம்,றுஹுணு, கிழக்கு, தென் கிழக்கு, சபரகமுவ, ரஜரட்ட, வயம்ப, ஊவா வெல்லஸ்ஸ, கட்புல ஆற்றுகைக் கலை பல்கலைக்கழகம்.

2. பணிப்பாளர்,

கம்பஹா ஆயுர்வேத கற்கை நிறுவகம், சுதேச மருத்துவ கற்கை நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கை நிறுவகம், சுவாமி விபுலானந்தா நிறுவகம்.

3. வளாக அதிபதி,

ஸ்ரீபாளி வளாகம்,கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்.

ஐயா,

## மஹபொல புலமைப்பரிசில் மாதாந்த தவணைத் தொகை செலுத்தும் முறையை மறுசீரமைத்தல்.

2018 ஜுலை மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற 68 ஆவது நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் மாதாந்த புலமைப்பரிசில் தவணைத் தொகையை மிகவும் துரிதமாக உரிய திகதியில் தாமதமின்றி புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு செலுத்தும் நோக்கில் தற்போது நிலவும் தவணைப் பணம் செலுத்தும் முறையில் திருத்தம் மேற்கொண்டு மறுசீரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர், உப தலைவர், செயலாளர் மற்றும் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களில் ஒருவரான திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர மற்றும் பணிப்பாளர் ஆகியோருக்கிடையில் 2018.08.01 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலுக்கமைய மேலே குறிப்பிடப்பட்ட புலமைப் பரிசில் தவணைப் பணம் செலுத்தும் முறையை மறுசீரமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கான திறைசேரி அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, தவணைப் பணம் செலுத்தும் முறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு கீழே குறிப்பிடப்படும் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

1. தற்போது மாதாந்த புலமைப்பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கையொப்ப ஆவண முறையை நீக்குவதற்கும் அதற்குப் பதிலாக புலமைப் பரிசில் உரித்துடையவர்களின் மாதாந்த புலமைப் பரிசில் தவணைத் தொகை சம்பந்தமாக துணைவேந்தரால் பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப் பட்டியலைப் பெற்று அதற்கமைய குறிப்பிட்ட மாதாந்த தவணைத் தொகையைச் செலுத்துதல்.

දුරකථන/தொலைபேசி/Tel: 0112685011, ෆැක්ස්/பெக்ஸ்/Fax: 0112685548, Web : www.mahapola.lk, Email : mahapola@mahapola.lk

1981 අංක 66 දරන මහපොළ උසස් අධ්‍යාපන ශිෂ්‍යත්ව භාර අරමුදල් පනත යටතේ ස්ථාපිතයි. மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியமானது 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்டதாகும். Established under Mahapola Higher Education Scholarship Trust Fund Act No.66 of 1981.

இங்கு, துணைவேந்தர் குறிப்பிட்ட மாதாந்த தவணைத் தொகையை புலமைப் பரிசில் உரித்துடையவர்களுக்கு செலுத்துவதனை பரிந்துரை செய்வதுடன், அந்தப் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கமைய, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் குறிப்பிட்ட மாதத்திற்காகப் பெற்றுக்கொடுக்கப்படும் பங்களிப்புத் தொகை நேரடியாக மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு வரவு வைக்கப்படும். அதன் பின்னர் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் புலமைப் பரிசில் உரித்துடையவர்களுக்குரிய மொத்தத் தொகையான ரூ. 5000/- அல்லதுரூ.5050/- குறிப்பிட்டபுலமைப் பரிசில் உரித்துடையவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுவதுடன் தவணைத் தொகையை உரியவர்களுக்குச் செலுத்துதல் தொடர்பில் பல்கலைக்கழகம் தலையீட்டினை மேற்கொள்ளாது.

2. இந்தப் புதிய முறையை அமுல்படுத்தும்போது கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் மீது பல்கலைக்கழகங்கள் விசேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். அதற்கமைய உரிய பணியாட் தொகுதியைச் சேர்ந்தவர்களை அறிவுறுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழகத்தினால் உறுதிப்படுத்தப்படும் பெயர்ப் பட்டியல் சகல விதத்திலும் சரியானதாகவும் பூரணமானதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் மொத்த மாணவர் எண்ணிக்கை மற்றும் ஏற்பட்ட மாற்றங்களை கடந்த மாதத்துடனான இணக்க அறிக்கையின் (Reconciliation report)ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.பரிந்துரை செய்யப்படும் இறுதிப் பெயர்ப் பட்டியல் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். இப் பெயர்ப் பட்டியல் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய பெயர்ப் பட்டியலுடன் பொருந்துதல் வேண்டும்.( இறுதிப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் போது “சிறப்பு’ “சாதாரண’ புலமைப்பரிசில் தனித்தனியாக குறிப்பிடவும்) மாணவர்களின் பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு பீடத்திலிருந்தும் பெற்று மாணவர் சேவைப் பிரிவினால் இறுதிப் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும். இந்த பெயர் பட்டியலைத் தயாரிக்கும்போது மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் புலமைப் பரிசில் செலுத்துவதற்கான நிபந்தனைகளுக்கமைய தயாரித்தல் வேண்டும். புலமைப் பரிசில் செலுத்தல் விதிமுறைகளுக்கமைய மற்றும் புலமைப் பரிசில் தவணைத் தொகையை இடைநிறுத்தல் மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பாக கீழே குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் உரிய முறையில் கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்ற வேண்டியிருப்பதுடன் 80%வருகை கட்டாயமானதாகும்.அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் தவணைத் தொகையை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யக் கூடாது.

- குறிப்பிட்ட மாதத்தினுள் கீழ் குறிப்பிடப்படும் காரணங்களின் அடிப்படையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டால் அந்த மாணவர்களின் தவணைத் தொகையை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யக் கூடாது.

    I. ஒழுக்க மீறல் செயற்பாடுகள் காரணமாக வகுப்பு தடை செய்யப்படல்.
    II. பல்கலைக்கழகச் சொத்துக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் மற்றும் அதற்காக தண்டனை வழங்கப்பட்டிருத்தல்.
    III. பகிடிவதை தொடர்பாக தண்டனை வழங்கப்பட்டிருத்தல்.
    IV. துஷ்பிரயோக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருத்தல் மற்றும் அதற்காக தண்டனை வழங்கப்பட்டிருத்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலை தனியாக மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய அவர்களின் புலமைப் பரிசில் தவணைத் தொகை உடனடியாக இடைநிறுத்தப்படுவதுடன், புலமைப் பரிசிலை இரத்துச் செய்தல் தொடர்பாக மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் தீர்மானிக்கப்படும்.

பரிந்துரை செய்யப்படும் இறுதிப் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும்போது கீழ் குறிப்பிடப்படும் விடயங்களையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

- பல்கலைக்கழகங்களுக்கான புலமைப் பரிசிலுக்காக கல்வியாண்டொன்றுக்கு உச்சளவாக 10 தவணைகள் எனும் அடிப்படையில் பாடநெறிக்குரிய கல்வியாண்டுகளின் எண்ணிக்கைக்கு மாத்திரம் புலமைப் பரிசில் தவணைப் பணம் செலுத்தப்படும்.

- பாடநெறிக் காலப் பகுதியில் ஒரு மாதத்திற்கு ஒரு புலமைப்பரிசில் தவணை வீதம் மாத்திரம் மாணவன் / மாணவி கல்வி பயிலும் பல்கலைக்கழகங்களில் செலுத்தப்படும். மாணவன் / மாணவியினால் ஏதேனும் நிலுவைத் தவணைத் தொகை கோரப்படுமிடத்து அந்நிலுவைத் தொகையானது பல்கலைக்கழகத்தினால் அம் மாணவன் / மாணவி கற்கை நெறியின் ஆரம்பத்திலுருந்து கற்றலில் ஈடுபடுகின்றாரென உறுதிப்படுத்துவதன் மூலம் பரிந்துரை செய்யப்படுதல் வேண்டும். இந்தப் புலமைப்பரிசிலை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இந்தப் பாடநெறிக்கோ அல்லது வேறெந்தப் பாடநெறிக்கோ எந்தவிதமான புலமைப் பரிசில் அல்லது மாணவர் உதவு தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதியில்லாதிருப்பதுடன்,வேறு புலமைப்பரிசிலொன்றுக்கு தகுதிபெறும் ஒரு மாணவருக்கு அவர்களது விருப்பத்தின்பேரில் முதலில் பெற்றுக்கொண்ட புலமைப்பரிசிலை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அந்தப் புலமைப்பரிசிலை இரத்துச்செய்துவிட்டு புதிய புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். இவ்வாறான தகவல்களை பல்கலைக்கழகங்கள் உடனடியாகமஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதற்கிணங்க குறிப்பிட்ட இறுதிப் பரிந்துரைக்கமைய கொடுப்பனவுப் பட்டியலைத் தயாரித்தல் வேண்டும்.

- புலமைப்பரிசில் வழங்கப்படும் பாட நெறிக்குப் பதிலாக வேறு பாட நெறியைப் பின்பற்றுதல், பாட நெறியில் பங்குபற்றாதிருத்தல், நீண்ட காலமாக பாட நெறியில் பங்குபற்றாதிருத்தல், வருடாந்தப் பரீட்சைகளில் சித்தியடையாமை, பாடநெறியைக் கைவிடல் போன்ற விடயங்கள் புலமைப் பரிசில் இரத்துச் செய்யப்படுவதற்கான காரணமாகும்.

- வருமானம் உழைக்கும் நோக்கில் வியாபாரமொன்றில், சேவையொன்றில் அல்லது தொழிலொன்றில் ஈடுபடல் போன்ற காரணங்களும் புலமைப் பரிசில் இரத்துச் செய்யப்படுவதற்கான காரணமாக இருப்பதனால் அது சம்பந்தமாக அறியக் கிடைத்தவுடனேயே பல்கலைக்கழகம் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

- மாணவரின் கட்டுப்பாட்டை மீறிய தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட மாணவர் கல்வியாண்டினை பிற்போடும் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக பல்கலைக்கழகம் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

- பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடமாற்றல்கள், மேன்முறையீட்டுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் புலமைப் பரிசிலை வழங்குதல், புலமைப் பரிசிலுக்காக தெரிவு செய்யப்படும்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு வழங்க வேண்டிய தகவல்கள் உரிய பிரகாரம் கிடைக்காமையின் காரணமாக புலமைப் பரிசிலுக்கு பரிந்துரை செய்யப்படாத மாணவர்களுக்கு அந்தக் குறைபாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் புலமைப் பரிசிலை வழங்கும் சந்தர்ப்பங்களில் அந்த மாணவர்களின் பெயர்களை புதிதாக உள்ளடக்கி செலுத்தும் அலுவல்களை மேற்கொள்ளல்.

- புலமைப் பரிசிலைபெற்றுக்கொள்வதற்கான படிவங்களை குறைபாடுகளுடன் நிரப்பியுள்ள மாணவர்களுக்கு மீண்டும் தவணைத் தொகையைச் செலுத்தும்போது நிலுவை தவணைத் தொகையுடன் செலுத்துவதற்கு பரிந்துரை செய்தல்.

- சிறப்புப் பட்டங்களைப் பயிலும் மாணவர்களின் பெயர்ப் பட்டியலை பல்கலைக்கழகங்களின் ஊடாகப் பெற்று சிறப்புப் பட்டத்திற்குரிய மேலதிக ஒரு வருடத்திற்கு மேலதிகமாக 10 தவணைத் தொகைகள் என்ற ரீதியில் அந்த மாணவர்களுக்கு தவணைத் தொகைகளை செலுத்தல் வேண்டும்.அந்த சகல சீர்படுத்தல்களும்மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்குரிய சரியான பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு மாதமும் பரிந்துரை செய்யப்படும் பெயர்ப் பட்டியலுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- செயன்முறைப் பயிற்சி மாணவர்களின் பெயர்களும் கொடுப்பனவு பரிந்துரைப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்படல் வேண்டும். அம் மாணவர்களின் பெயர் உரிய பீடத்தின் பீடாதிபதியின் பரிந்துரையுடன் தனியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

- உரிய பீடத்தின் பீடாதிபதியின் அனுமதியுடன் மாணவர்கள் வெளிநாடொன்றுக்கு குறுகிய கால கற்கைநெறிக்காக அல்லது செயன்முறைப் பயிற்சிக்காக செல்லுமிடத்து அம் மாணவர்களின் பெயர் நிறுத்தி வைத்தல் பெயர்ப் பட்டியலில்(suspended list) உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அம் மாணவர்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து மீண்டும் கற்கை நெறியை ஆரம்பிக்கும் போது எழுத்து மூல உறுதிப்படுத்தலுடன் அம் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் தனியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

- காலந் தாழ்த்தி கற்கை நெறியை தொடரும் மாணவர்களினதும் காலந் தாழ்த்தி புலமைப்பரிசிலிற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களினதும் (Pending Settled Student) வங்கித்தரவுகள் (Bank Details) அவர்களின் கொடுப்பனவை ஆரம்பிப்பதற்காக பதிவாளர் மாணவர் சேவையினுடாக உடனடியாக எமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டு பரிந்துரை செய்யப்பட்ட இறுதிப் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழகத்தினால் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். (குறிப்பிட்ட பரிந்துரை செய்யப்படும் பெயர்ப் பட்டியலை தயாரிக்க வேண்டிய விதம் மற்றும் அந்த ஆவணங்களின் இணக்க அறிக்கை(Reconciliation report) இத்துடன் இணைப்பு A ஆக இணைக்கப்பட்டுள்ளது.)அந்தப் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில்

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் இறுதி கொடுப்பனவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படும்.அங்கு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்படும் பெயர்ப் பட்டியலுக்குரிய மாணவர்களின் புலமைப் பரிசில் கொடுப்பனவை பரீட்சித்து அந்த இறுதி கொடுப்பனவுப் பட்டியலுக்குரிய இறுதிப் பரிந்துரையை பல்கலைக்கழகத்தின் ஊடாக மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு பிரதியுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.அதற்கமைய, பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பங்களிப்புத் தொகை அந்த ஆணைக் குழுவினால் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு வரவு வைக்கப்படும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் இதற்கான திறைசேரியின் அங்கீகாரம் ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டிற்கான காலவரையறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

I. ஒவ்வொரு மாதமும் **20** ஆம் திகதியன்று குறிப்பிட்ட கொடுப்பனவு பரிந்துரை செய்யப்பட்ட புலமைப் பரிசில் பெறுபவர்களின் பெயர்ப் பட்டியலை மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்புதல்.

II. இங்கு கல்வி நடவடிக்கைகளுக்கான 80% வருகையை கணக்கிடும்போது கடந்த மாதத்தின் **01 முதல் 30** வரையிலான காலப் பகுதி கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். உதாரணமாக, ஆகஸ்ட் மாதத்திற்கான தவணைத் தொகையைச் செலுத்துவதற்காகஜுலை 01 முதல் 30 வரையிலான காலத்தைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

III. ஒவ்வொரு மாதமும் **30** ஆம் திகதியன்றுஉறுதிப்படுத்தப்பட்ட புலமைப் பரிசில் கொடுப்பனவுப் பட்டியல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்படுவதுடன், அந்தக்கொடுப்பனவுப் பட்டியல் பல்கலைக்கழகத்தினால் பரீட்சிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவுப் பட்டியலை (Certified Payment List) கொடுப்பனவு செலுத்தப்படும் மாதத்தின் **05** ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.

IV. பல்கலைக்கழகங்களின் ஊடாக பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவுப் பட்டியலுக்கமைய மாதாந்த புலமைப் பரிசில் தவணைத் தொகைக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்காக உரிய மாதத்தின் **12** ஆம் திகதி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்குவைப்பிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

V. ஒவ்வொரு மாதமும் **15** ஆம் திகதியன்றுமஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு புலமைப் பரிசில் பெறுபவர்களினதும் மாதாந்த புலமைப் பரிசில் தவணைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுவதுடன்,அந்த செலுத்துகை பற்றி குறுஞ் செய்தி (SMS)ஊடாக குறிப்பிட்ட புலமைப் பரிசில் பெறுபவருக்கு அச் சந்தர்ப்பத்திலேயே அறிவிக்கப்படும். இந்த மொத்த செயற்பாட்டையும் **25** நாட்களுக்குள் நிறைவு செய்வதற்கு மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் எதிர்பார்ப்பதுடன் அதற்காக தங்களுடைய பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகும். தற்போது அமுல்படுத்தப்படும் செலுத்தல் முறைக்கமைய கையொப்ப ஆவணத்தை பயன்படுத்தும்போது புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்தும் செயற்பாட்டிற்கு 40 அல்லது 50 நாட்கள் தேவைப்படுகின்றது.

இந்தப் புதிய முறையை அமுல்படுத்துவதன் ஊடாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் பல்கலைக்கழக பணியாட் தொகுதியின் அலுவல்கள் எளிதாக்கப்படும்.

I. மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக உரிய திகதி தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் மாணவர்களுக்கு அது சம்பந்தமாக பல்கலைக்கழகங்களின் ஊடாக, மாணவர் அமைப்புக்களின் ஊடாக அறிவுறுத்துவதற்கான தேவை கிடையாது. அந்த அனைத்து தகவல்களையும்மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் இணையத்தளத்தின் ஊடாக மாணவர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

II. கையொப்ப ஆவணம் அமுல்படுத்தப்படாமை காரணமாக மஹபொல புலமைப்பரிசில் தவணைத் தொகையைச் செலுத்தும் செயற்பாடு எளிதாகவும்வசதியானதுமாக இருப்பதனால் பல்கலைக்கழகப் பணியாட் தொகுதிக்கு ஏனைய மாணவர் நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக காலத்தைப் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.

III. உரிய பிரகாரம் பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப் பட்டியல் மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருப்பின் மஹபொல புலமைப்பரிசில் செலுத்தல் சம்பந்தமாக பல்கலைக்கழகங்கள் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருக்காமை.

IV. மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதற்குத் தேவையான நிதி பல்கலைக்கழகத்தின் மீண்டெழும் செலவினத்திற்கான நிதியிலிருந்து செலவு செய்யப்படாமையினால் பல்கலைக்கழகங்களின் காசுப் பாய்ச்சல்களுக்கு தாக்கம் ஏற்படாமை.

V. பெற்றுக்கொள்ளப்படாத தவணைத் தொகையை மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு திருப்பியனுப்பும் அலுவலில் இருந்து பல்கலைக்கழகம் விடுவிக்கப்பட்டிருத்தல்.

VI. புலமைப் பரிசிலைச் செலுத்துவதற்கான மேலதிக செலவுகளான அச்சடித்தல் செலவு, போக்குவரத்துச் செலவு, உத்தியோகத்தர்களின் பயணச் செலவு என்பன மீதமாகும். (அனைத்து பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப் பட்டியல் மற்றும் கொடுப்பனவுக்கான பரிந்துரைகள் மின்னஞ்சல் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்படுவதனால்)

இறுதியாக இந்த புதிய கொடுப்பனவு முறையை அமுல்படுத்தும்போது மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் கீழே குறிப்பிடப்படும் கொடுப்பனவு அறிக்கைகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு உடனடியாக (செலுத்தியவுடனேயே) பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

I. உரிய தவணைத் தொகையை வங்கியில் வரவு வைக்கப்பட்டவுனனேயே புலமைப் பரிசில் உரிமையாளருக்கு குறுஞ்செய்தி (SMS)ஊடாக அறிவித்தல்.

II. உரிய மாதத்திற்குரிய பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப் பட்டியலுக்கான கொடுப்பனவுகளுடன் சம்பந்தமான வவுச்சர் மற்றும் வங்கியினால் வழங்கப்படும் கொடுப்பனவு பற்றிய சான்றிதழின் பிரதிகளை உரிய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புதல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பும் அலுவலை மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் மேற்கொள்ளல்.

III. ஒவ்வொரு வருட இறுதியிலும்அந்த வருடத்திற்குரிய கொடுப்பனவுப் பட்டியல்களின் பொழிப்பு மற்றும் அறிக்கையை சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்புதல்.

IV. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட தவணைத் தொகையைச் செலுத்துவதற்கான தொகை கிடைக்கப் பெற்றவுடனேயே அதற்கான பற்றுச் சீட்டை வெளியிடல்.

V. வருடாந்தகொடுப்பனவுப் பட்டியல்களின் பொழிப்பை திறைசேரிக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புதல்.

இந்தப் புதிய கொடுப்பனவு முறையை அமுல்படுத்தும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை இனங்கண்டு அந்தச் சிக்கல்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமான தீர்வுகள் தொடர்பான முன்மொழிவுகளை மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திடம் முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இது தொடர்பான சுற்றறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வெளியிடப்படும்.

இந்தப் புதிய கொடுப்பனவு முறையை அமுல்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வழங்கும் ஒத்துழைப்பை பெறுமதிமிக்கதாகக் கருதுகின்றேன்.

இப்படிக்கு - உண்மையுள்ள

ஒப்பம்

**எம்.பராக்கிரம பண்டார**
பணிப்பாளர்
மஹபொல உயர் கல்விபுலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்.

**பிரதிகள்:**

தகவலுக்காக:

I. கௌரவ பிரதம நீதியரசர், தலைவர்,மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்.
II. கௌரவ அமைச்சர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு.
III. செயலாளர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு.
IV. திறைசேரியின் பிரதிச் செயலாளர்.
V. தலைவர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.
VI. செயலாளர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.
VII. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு.
VIII. பதிவாளர்
IX. நிதிப் பொறுப்பாளர்
X. திரு.எஸ்.வீ.டீ.கேசரலால் குணசேக்கர - நம்பிக்கைப் பொறுப்பாளர்
XI. கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**அட்டவணை - 01**

தலைவர் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பணிப்பாளர் / மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

**மாதாந்த புலமைப் பரிசில் கொடுப்பனவை பரிந்துரை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தல்**

இத்துடன் சமர்ப்பிக்கப்படும் இணைப்பு I முதல் V வரையான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் மாணவர் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும், அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும் நாம் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம். அந்த மாணவர்கள் மஹபொல புலமைப் பரிசில் மாதாந்த தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான மஹபொல கொடுப்பனவுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதற்கமைய **இணைப்பு I** மற்றும் **II** இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் குறிப்பிட்ட கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதனால் மற்றும் குறிப்பிட்ட கணக்கெடுப்புக்களை சரியாக குறிப்பிட்டிருப்பதனால் அவர்களுக்கு 2019.................. மாதத்திற்கான புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதனை பரிந்துரை செய்வதுடன் புலமைப் பரிசில் தவணைத் தொகைக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பங்களிப்புத் தொகையை நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்வதற்குத் தேவையான ரூபா....................................... தொகையை மஹபொல புலமைப்பரிசில் நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

02. **இணைப்பு - III** மற்றும் **இணைப்பு - IV** இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளைப் பூரத்தி செய்யாதிருப்பதனாலும் **இணைப்பு V** இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களுக்கான பாடநெறியின் கல்வி நடவடிக்கைகள் குறிப்பிட்ட மாதத்தில் நடைபெறாதமையினாலும் 2019................... மாதத்திற்கான புலமைப் பரிசில் தவணைத் தொகை செலுத்தப்பட மாட்டாது.

03. மேலும் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால் மஹபொல புலமைப் பரிசிலை செலுத்துதல் தொடர்பாக கொடுப்பனவு வழிகாட்டல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யாதிருந்த போதிலும் தவறுதல் அல்லது தவறு காரணமாக பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செலுத்துதல் பரிந்துரை செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான மாதாந்த புலமைப் பரிசில் தவணைத் தொகை **(இணைப்பு - I மற்றும் - II)** மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தினால் செலுத்தப்படுமிடத்து அதற்கான நட்டஈட்டை பல்கலைக்கழகம் பொறுப்பேற்கும்.

.........................................   .........................................

துணைவேந்தர் (Vice Chancellor)   பதிவாளர் (Registrar)

.........................................

நிதிப் பொறுப்பாளர் (Bursar)

*இணைப்பு - A*

# மஹபொல புலமைப் பரிசில் பெற்றுக்கொள்பவர்கள் பற்றிய இணக்கக் கூற்று

**2019..............................**

| | கல்வியாண்டு | | | | | | | | | | செலுத்தும் மாதத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை | | கடந்த மாதத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 12/13 | | 13/14 | | 14/15 | | 15/16 | | 16/17 | | | | | |
| | M | O | M | O | M | O | M | O | M | O | M | O | M | O |
| | | | | | | | | | | | | | | |
| தகைமை பெற்ற மற்றும் தவணைத் தொகையை செலுத்துவதற்குப் பரிந்துரை செய்யப்பட்ட மாணவர்கள் - (இணைப்பு - I ) | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| மேன்முறையீடு / கல்வியாண்டு விடுபடல் காரணமாக பரிந்துரை செய்யப்பட்ட மேலதிக மாணவர்கள் - (இணைப்பு - II ) | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் அளவுகோல்களை பூர்த்தி செய்யாமையினால் பரிந்துரை செய்யப்படாத மாணவர்கள் - (இணைப்பு III) | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| இடைநீக்கப்பட்ட / பாடநெறி நிறைவு பெற்றமையினால் தவணைத் தொகை பரிந்துரை செய்யப்படாத மாணவர்கள் - (இணைப்பு – IV) | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| தகைமைபெற்ற ஆனாலும் குறிப்பிட்ட மாதத்திற்கான தவணைத் தொகை கோரிக்கையை முன்வைக்க முடியாத பாடநெறிக்குரிய மாணவர்கள் - (இணைப்பு - V ) | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | |

இணைப்பு - I

## தகைமை பெற்ற மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட மாணவர்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும், அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும், அவர்கள் மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்திருப்பதனால் 2019.................. மாதத்திற்கான மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதனை பரிந்துரை செய்வதாக இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| கல்வியாண்டு | கற்கை பீடம் | மாணவர் அடையாள அட்டை இல. | பெயர் | M | O | பல்கலைக்கழக மாணவர் சேவை உத்தியோகத்தரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 14/15 | மருத்துவம் | | | | | |
| மொத்தம் | | | | | | |

இணைப்பு -II

## மேன்முறையீட்டை முன்வைத்தமை காரணமாக / கல்வியாண்டு விடுபடல் காரணமாக பரிந்துரை செய்யப்பட்ட மேலதிக மாணவர்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும் உறுதிப்படுத்துகின்றோம். மேன்முறையீட்டை அடிப்படையாகக்கொண்டு அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மற்றும் கல்வியாண்டு விடுபடல் காரணமாக தவணைத் தொகையை செலுத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளமையினால் அந்த அனைத்து மாணவர்களும் 2019.................. மாதத்திற்கான மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதுடன், தவணைத் தொகையை செலுத்துவதற்கு பரிந்துரை செய்கின்றோம்.

| கல்வியாண்டு | கற்கை பீடம் | மாணவர் அடையாள அட்டை இல. | பெயர் | M | O | பரிந்துரை செய்தமைக்கான காரணம் | பல்கலைக்கழக மாணவர் சேவை உத்தியோகத்தரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| 14/15 | மருத்துவம் | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

இணைப்பு -III

மஹபொல புலமைப் பரிசிலை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்ற ஆனாலும் மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு வழிகாட்டல்களுடன் இயைந்து செல்லாமையினால் பரிந்துரை செய்யப்படாத மாணவர்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும், அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும், அவர்கள் மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாதிருப்பதனால் 2019.................. மாதத்திற்கான மஹபொல புலமைப் பரிசில் தவணைத் தொகையைச் செலுத்துவதற்குப் பரிந்துரை செய்யப்படவில்லையென இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| கல்வியாண்டு | கற்கை பீடம் | மாணவர் அடையாள அட்டை இல. | பெயர் | M | O | பரிந்துரை செய்யாமைக்கான காரணம் | பல்கலைக்கழக மாணவர் சேவை உத்தியோகத்தரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| 14/15 | மருத்துவம் | | | | | 80% வருகையை பூர்த்தி செய்திராமை | |
| மொத்தம் | | | | | | | |

இணைப்பு -IV

தகைமை பெறாத, கொடுப்பனவு பரிந்துரை செய்யப்படாத மற்றும் இடைநிறுத்தப்பட்டவர்கள் / கல்வியாண்டு விடுபட்ட மாணவர்களை நீக்குதல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும் உறுதிப்படுத்துகின்றோம். மஹபொல புலமைப் பரிசில் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய அவர்கள் கொடுப்பனவுக் கொள்கைகளை மீறியமையின் காரணமாக 2019.................. மாதத்திற்கான தவணைத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் தகுதியற்றவர்களாக இருப்பதுடன் கொடுப்பனவை பரிந்துரை செய்யவில்லை.

| கல்வியாண்டு | கற்கை பீடம் | மாணவர் அடையாள அட்டை இல. | பெயர் | M | O | பரிந்துரை செய்யாமைக்கான காரணம் | பல்கலைக்கழக மாணவர் சேவை உத்தியோகத்தரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| 14/15 | மருத்துவம் | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

இணைப்பு - V

**மஹபொல புலமைப் பரிசிலை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்ற ஆனாலும் 2019........................... தவணைத் தொகைக்கான கோரிக்கையை முன்வைக்க முடியாத பாடநெறிகளுக்குரிய மாணவர்கள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரி மாணவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் மஹபொல புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்பவர்கள் எனவும் பாடநெறிக்குரிய கல்வி நடவடிக்கைகள் நடைபெறாமையின் காரணமாக 2019.................. மாதத்திற்கான மஹபொல தவணைத் தொகையைச் செலுத்துவதற்குப் பரிந்துரை செய்யப்படவில்லையென இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

| கல்வியாண்டு | கற்கை பீடம் | மாணவர் அடையாள அட்டை இல. | பெயர் | M | O | பரிந்துரை செய்யாமைக்கான காரணம் | பல்கலைக்கழக மாணவர் சேவை உத்தியோகத்தரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| 14/15 | மருத்துவம் | | | | | பாடநெறிக்குரிய கல்வி நடவடிக்கைகள் நடைபெறாமை | |
| மொத்தம் | | | | | | | |